# Indian Polity Notes Part 18 in Tamil

## 18. தீர்ப்பாயங்கள் (Tribunals)

### பகுதி XIV – A (சரத்துக்கள்: 323 A – 323 B)

- தீர்ப்பாயங்கள் பற்றிய சட்ட வகைமுறைகளை 1976 – ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட 42 – வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தினால் நமது இந்திய அரசியலமைப்பில் சரத்து 323 A – 323 B வாயிலாக புதிதாக சேர்க்கப்பட்டது.

**சரத்து – 323 A**

- மத்திய மற்றும் மாநில அரசுகளின் கீழ் பணிபுரியும் அரசுப் பணியாளர்களின் பணி குறித்த நிலைகள் மற்றும் பணியிட அமைவுகள் (recruitments) தொடர்பான தகராறுகளை (disputes) தீர்ப்பதற்காக நாடாளுமன்ற சட்டத்தின் வாயிலாக செயலாட்சித்துறை தீர்ப்பாயங்கள் (Administrative Tribunals) ஏற்படுவத்துவதற்கு வழிவகை செய்கிறது.
- மத்திய அரசிற்கு செயலாட்சி அல்லது நிர்வாகத்துறை தீர்ப்பாயம், ஒவ்வொரு மாநிலத்திற்கும் நிர்வாகத் துறை தீர்ப்பாயம் அல்லது 2 அல்லது மேற்பட்ட மாநிலங்களுக்கு ஒரு தீர்ப்பாம் அமைக்க வகை செய்யலாம்.
- ஒவ்வொரு தீர்ப்பாயங்களும் தங்கள் அதிகாரத்தை குறிப்பிடலாம்.
- தீர்ப்பாயங்கள் பின்னற்ற வேண்டிய வரம்பு: சாட்சிய விதிகள் உள்ளிட்ட செயல்முறைகளை வழங்கலாம்.
- தீர்ப்பாயம் அமைப்பதற்கு முன், வேறு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளை அந்த நிர்வாகத்துறை தீர்ப்பாயத்திற்கு வகை செய்யலாம்.
- கட்டணங்கள் உள்ளிட்ட துணை, இடை, விளைவுளால் ஏற்படக்கூடிய விடயங்களுக்கும் வகைமுறை செய்யலாம். நாடாளுமன்றம், திறம்பட செயல்பட, விரைவாக தீர்வுகாண ஆணைகளை செயல்படுத்த வகை செய்யலாம்.

**செயலாட்சித் துறை தீர்ப்பாயச் சட்டம்**

- 1985 – ல் செயலாட்சித் துறை தீர்ப்பாயச் சட்டம் இயற்றப்பட்டது. இதன்படி மத்திய அரசு செயலாட்சித் துறை தீர்ப்பாயங்கள் (CAT) மாநில அரசு செயலாட்சித் துறை தீர்ப்பாயங்கள் (State Admimistrative Tribunals) மற்றும் கூட்டு செயலாட்சித் துறை தீர்ப்பாயங்கய் (Joint Administrative Tribunals) என மூவகைத் தீர்ப்பாயங்கள் ஏற்படுத்தப்பட்டன.
- இதன்படி இயற்றப்படும் சட்டமானது உச்சநீதிமன்ற அதிகார வரம்பன தவிர மற்ற நீதிமன்றங்களின் அதிகார வரம்பிற்கு உட்படாது.

**சரத்து – 323 B**

- வரி விவகாரங்கள், ஏற்றுமதி, இறக்குமதி, தொழிலாளர், தொழிற் தகராறுகள் பணி குறித்த விசயங்கள், அத்தியாவசியப் பண்டங்களை அளிப்புச் செய்தல், நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற தேர்தல்கள் தொடர்பான விடயங்கள் மற்றும் அதன் முறையீடுகள் குறித்து விசாரித்து தீர்மானிப்பதற்கான தீர்ப்பாயங்களை (Tribunals for other matters) உண்டாக்குவது குறித்து கூறுகிறது.
- வரி விதிப்பு, மதிப்பீடு, வசூல், செயல்படுத்த
- வெளிநாட்டு பரிவர்த்தனை, ஏற்றுமதி இறக்குமதி, சுங்க எல்லைகளில்,
- தொழிற்சாலை மற்றும் தொழிலாளர் தகராறுகள்.
- கையகப்படுத்தல் மூலம் நிலச் சீர்திருத்தம், அதன் உரிமைகள் விவசாய நில உச்சவரம்பு.
- நகர்ப்புற சொத்து உச்சவரம்பு.
- உற்பத்தி, கொள்முதல், பகிர்தல், சமையல் எண்ணெய் வித்துக்கள், எண்ணெய் உள்ளிட்ட பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்தும் நோக்கில்.
- நில உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களுக்கு உரிமை, நலன், வாடகை அதன் கட்டுப்பாடு, வாடகைதாரர் பிரச்சனைகள்.
- தீர்ப்பாயங்களின் வரிசை, நியமனம், ஒவ்வொரு தீர்ப்பாயங்களும் செயல்படும் அதிகார வரம்பு, அவமதிப்பு தண்டனை வழங்ககும் அதிகாரம் உள்ளிட்ட அதிகாரங்கள் தொடர்பாக சட்டம் இயற்றலாம்.